2557

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது.]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

இலங்கை நிர்வாக சேவையில் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2013 (2014)

Open Competitive Examination for Recruitment to Grade III of the Sri Lanka Administrative Service - 2013 (2014)

(03) சர்வதேச போக்குகள்
Global Trends

மூன்று மணித்தியாலங்கள்
Three hours

பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்

மிக முக்கியம் :

விடை எழுதுவதற்கு பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்.

✳ விடை எழுதும்போது பின்வருமாறு இலக்கங்கள் எழுதப்படாத விடைத்தாள்கள் மதிப்பிடப்படமாட்டாது.

1 2 3 4

உமது சுட்டெண்ணை இங்கேயும் மூன்றாம் பக்கத்திலும் எழுதுக.

....

சரியானது என உறுதிப்படுத்துகின்றேன்.

....
நோக்குனரின் முதலெழுத்தொப்பம்

முக்கியம் :

✳ இவ்வினாத்தாள் பகுதி **I** பகுதி **II** ஆகிய பகுதிகளையும் **6** பக்கங்களில் **40** வினாக்களையும் கொண்டது.

✳ விடைகளை எழுதமுன் வினாத்தாளைப் பக்க ஒழுங்கிற்கேற்ப ஒழுங்குபடுத்துக.

✳ பகுதி **I இன் எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலும்** பகுதி II **இன் எல்லா வினாக்களுக்கும் தரப்படுகின்ற தாள்களிலும்** விடை எழுதுக.

✳ இவ்வினாத்தாளுக்குரிய நேரம் **மூன்று மணித்தியாலங்கள்** ஆகும்.

✳ மண்டப மேற்பார்வையாளரின் அறிவித்தலின் பின்னரே விடைகளை எழுதத் தொடங்குக.

✳ **உமக்குத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்ப விடைகளை எழுதுக. அறிவுறுத்தல்களுக்கு அமையாத விடைகளுக்குப் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.**

✳ விடைகள் தரப்படாவிட்டாலும் வினாத்தாளை மண்டப மேற்பார்வையாளரிடம் கையளிக்க வேண்டும்

✳ **கறுப்பு** அல்லது **நீல** நிறப் பேனையினால் மாத்திரம் தெளிவாக விடைகளை எழுதுக. **பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்.**

✳ இவ்வினாத்தாளைப் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லல், அதன் ஒளிப்பிரதியை எடுத்தல் என்பன குற்றமாகும்.

✳ **தெளிவற்ற இலக்கம், தெளிவற்ற கை எழுத்துகள், அழிக்கும் வெண்மைப் பயன்பாடு, பென்சிலைப் பயன்படுத்தி எழுதிய விடைகள் என்பவற்றுக்கு மதிப்பீட்டின் போது புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.**

பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்

பக்க எண்	வினா எண்	பெற்ற புள்ளிகள்
2	1 - 13	
3	14 - 23	
4	24 - 32(ii)	
5	32(iii) - 35	
6	36 - 40	
மொத்தம்		

இறுதிப்புள்ளிகள்

இலக்கத்தில்	
எழுத்தில்	

விடைத்தாளைப் பரீட்சித்தவர்	
புள்ளிகளைப் பரீட்சித்தவர்	

EXAMMOOD.LK

[பக் 2 ஐப் பார்க்க.

பகுதி II

- **36** தொடக்கம் **40** வரையிலான ஒவ்வொரு வினாவிற்குமான **சரியான விடையை** உமக்கு வழங்கப்பட்டுள்ள **விடைத்தாளில்** எழுதுக.

36. "பச்சை வாயுவானது சுற்றாடலுக்கு வெளியேற்றப்படுவதை குறைத்துக் கொள்வதற்கான வழிமுறைகளை எடுக்கும்போது அபிவிருத்தியடைந்த நாடுகள் கூடுதலான பொறுப்புக்களை ஏற்றுக் கொள்ள வேண்டும்."
தற்போதைய பூகோள நிலைமையின் கீழ் இந்தக் கூற்று எவ்வளவு தூரம் பொருந்தக்கூடியதாக இருக்கும் என்பதை உதாரணங்களுடன் விளக்குக. *(08 புள்ளிகள்)*

37. தற்போது பிறிக்ஸ் (BRICS) ஒழுங்கமைப்பு அரசியல் மற்றும் பொருளாதார ரீதியாக முகங் கொடுக்க நேரிடும் சவால்கள் **நான்கை** உதாரணங்களுடன் விளக்குக. *(08 புள்ளிகள்)*

38. "பெருமளவான உற்பத்திக்குப் பதிலாக மக்களுக்காக உற்பத்தி செய்யப்பட வேண்டும். (Instead of mass Production, Production for masses)" என்பது மகாத்மா காந்தியினது எண்ணக்கருவாகும்.
இந்த எண்ணக்கருவை தற்போது எந்தளவு தூரம் உரிமையாக்கிக் கொள்ள முடியும் என்பதை **நான்கு** விடயங்களின் மூலம் பரிசிலிக்குக. *(08 புள்ளிகள்)*

39. "மேற்குலக நாடுகள் தத்தம் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக உலக ஊடகத்தைப் பயன்படுத்தி அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு அரசியல், பொருளாதார மற்றும் கலாசார ரீதியாக எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்திவருகின்றன என்பது ஒரு சிலரின் கருத்தாகும்."
இந்தக் கூற்றை சரியான காரணங்களுடன் விமர்சிக்க. *(08 புள்ளிகள்)*

40. "வறுமை எங்கு காணப்பட்டாலும் அது சுபிட்சத்தை எங்கும் இல்லாது ஒழித்துவிடும்."
'வறுமை' என்பதை பொருளாதார, சமூக, கலாசார, சுற்றாடல் கண்ணோட்டத்தில் பரிசீலிக்குக. *(08 புள்ளிகள்)*

* * *

EXAMMOOD.LK
EXAMMOOD.LK

(iii) இன்றைய காலகட்டத்தில் நிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்தியின் முக்கியத்துவத்தை உறுதிப்படுத்தும் **இரு** காரணங்களைக் குறிப்பிடுக.

(அ) ....

(ஆ) ....

33. ஒவ்வொருவருக்கும் சுயாதீன வாழ்க்கையை வெற்றிகரமாக்கி கொள்வதற்காக வன்திறன்களும் (hard skills) மென்திறன்களும் (soft skills) அவசியமாகும்.

(i) (அ) "வன்திறன்கள் " என்றால் என்ன?

....

(ஆ) "மென்திறன்கள்" என்றால் என்ன?

....

(ii) மென்திறன்கள் **இரண்டைக்** குறிப்பிடுக

(அ) ....

(ஆ) ....

(iii) நிறுவனத்தின் அலுவலர் குழுவினரிடையே மென்திறனை விருத்தி செய்தல் தற்போதைய உலக வங்கியினது முக்கியமான செயற்றிட்டமாகும். இவ்வாறு மென்திறனை விருத்தி செய்வதன் முக்கியத்துவத்திற்கான **இரு** காரணங்களைக் குறிப்பிடுக.

(அ) ....

(ஆ) ....

34. ஐக்கிய நாடுகள் சபையினது பிரதான நோக்கமாக அமைவது உலகில் சமாதானத்தை நிலைநாட்டுவதாகும்.

(i) உலகில் சமாதானத்தை நிலைநாட்டுவதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் மூலம் செய்யப்படுகின்ற **இரு** முயற்சிகளைக் குறிப்பிடுக.

(அ) ....

(ஆ) ....

(ii) அந்த முயற்சிகள் பெருமளவில் அண்மைக் காலங்களில் பாரிய விமர்சனத்திற்கு உட்பட்டதற்கான **இரு** காரணங்களைக் குறிப்பிடுக.

(அ) ....

(ஆ ....

(iii) ஐக்கிய நாடுகள் சபையை மிகவும் வினைத்திறனான ஒழுங்கமைப்பொன்றாக அமைத்துக் கொள்வதற்காக எடுக்கக்கூடிய **இரு** பரிகார நடவடிக்கைகளை முன்மொழிக.

(அ) ....

(ஆ) ....

35. ஐக்கிய அமெரிக்க நாடுகளில் அமைந்துள்ள தேசிய விமான பயணம் மற்றும் விண்வெளி நிர்வாக நிறுவனம் (NASA) உலகில் பிரதான பங்கினை ஆற்றி வருகின்ற ஒரு நிறுவனமாகும்.

(i) நாசா நிறுவனம் நிறுவப்பட்டதனால் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(அ) ....

(ஆ) ....

(ii) நாசா நிறுவனம் பெற்றுள்ள விசேட வெற்றிகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(அ) ....

(ஆ) ....

(iii) நாசா நிறுவனம் எதிர்காலத்தில் முகங் கொடுக்க வேண்டிய **இரு** சவால்களைக் குறிப்பிடுக.

(அ) ....

(ஆ) ....

(06 × 5 = 30 புள்ளிகள்)

[பக் 6 ஐப் பார்க்க.

EXAMMOOD.LK EXAMMOOD.LK

பகுதி I

● 1 தொடக்கம் 20 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்குமான **சரியான அல்லது மிகவும் பொருத்தமான விடையைத்** தெரிவு செய்து அதற்குரிய தெரிவினது **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக் கோட்டின் மீது** எழுதுக.

1. அண்மையிலே பழைய பட்டுப் பாதையை மீண்டும் ஆரம்பிப்பதற்கு முன் வந்துள்ள நாடு இவற்றுள் எது?
(1) இந்தியா (2) சீனா (3) இலங்கை (4) மியன்மார் (.........)

2. பின்வருவனவற்றுள் எந்த இரண்டு நாகரிகங்கள் இன்று மோதல் உள்ளவையாக சமூக விஞ்ஞானிகள் சிலரினால் கருதப்படுகின்றன?
(1) அமெரிக்க மற்றும் சீன (2) அமெரிக்க மற்றும் இஸ்லாமிய
(3) அமெரிக்க மற்றும் இந்திய (4) அமெரிக்க மற்றும் ரஷ்ய (.........)

3. சார்க் வலய நாடுகள் முகங்கொடுக்கும் பிரதானமான சவால் இவற்றுள் எது?
(1) வறுமை (2) வளப்பற்றாக்குறை (3) தொழிலின்மை (4) உள்ளகப் பிணக்குகள் (.........)

4. பூகோள சமுத்திர ஆணைக்குழுவினால் (The Global Ocean Commission) குறிப்பிட்டவாறு உலகிலே சமுத்திரங்களைப் பாதுகாப்பது அத்தியாவசியமான விடயமாக அமைவது இவற்றுள் எந்த காரணத்தினாலாகும்?
(1) மீன்பிடிக் கைத்தொழிலைப் பாதுகாத்தல்
(2) காபனீரோட்சைட்டு வெளியேறுவதைக் குறைத்தல்
(3) மில்லியன் எண்ணிக்கையிலான மிருகவகையினைக் (species) கண்டுபிடித்தல்
(4) சகல உணவுச் சங்கிலியையும் கடல் சுற்றாடல்களிலிருந்து ஆரம்பித்தல் (.........)

5. இஸ்ரேல் அரசு அமையப் பெற்றது எந்த வருடத்திலாகும்?
(1) 1947 (2) 1948 (3) 1949 (4) 1950 (.........)

6. பிம்ஸ்டெக் (BIMSTEC) ஒழுங்கமைப்பிற்குரிய நாடுகளை மட்டும் உள்ளடக்கிய தொகுதி இவற்றுள் எது?
(1) இலங்கை, நேபாளம், மாலைதீவு, இந்தியா, பூட்டான்
(2) இந்தியா, பங்களாதேஷ், தாய்லாந்து, பூட்டான், மியன்மார்
(3) இலங்கை, தாய்லாந்து, பாகிஸ்தான், நேபாளம், பங்களாதேஷ்
(4) இந்தியா, மியன்மார், பங்களாதேஷ், தாய்லாந்து, ஆப்கனிஸ்தான் (.........)

7. உலகிலே அதிகளவில் எதனோலை (ethanol) உற்பத்தி செய்யும் நாடு எது?
(1) பிறேசில் (2) சீனா (3) எகிப்து (4) இந்தியா (.........)

8. தேன் உற்பத்தியை அதிகரிப்பதற்கான கைத்தொழில் அறிமுகஞ் செய்யப்படுவது இவற்றுள் எந்தப் பெயரினாலாகும்?
(1) பசுமைப்புரட்சி (2) வெண்மைப் புரட்சி (3) மஞ்சள் புரட்சி (4) தங்கப் புரட்சி (.........)

9. பூகோள புத்தாக்க சுட்டெண்ணுக்கு (Global Innovation Index) ஏற்ப இந்த வருடத்திலே நான்காவது முறையாகவும் புத்தாக்கம் தொடர்பாக முதல் இடத்தைப் பெற்றுள்ள நாடு எது?
(1) சுவீடன் (2) சுவிற்சர்லாந்து (3) ஜேர்மன் (4) பிரான்ஸ் (.........)

10. குவன்தானாமோ (Guantanamo) சிறை முகாம் அமைந்திருப்பது எங்கே?
(1) ஆப்கனிஸ்தான் (2) பாலித்தீவு
(3) கியூபா (4) ஐக்கிய அமெரிக்க நாடுகள் (.........)

11. தற்போது ஐரோப்பிய ஒன்றியத்திற்கு உட்பட்ட நாடுகளின் எண்ணிக்கை எவ்வளவு?
(1) 27 (2) 28 (3) 29 (4) 30 (.........)

12. கபூகி மற்றும் நோ நாடகப் பாரம்பரியம் இவற்றுள் எந்த நாட்டில் ஆரம்பமானது?
(1) சீனா (2) ஜப்பான் (3) இந்தோனேசியா (4) தென் கொரியா (.........)

13. பிறிக்ஸ் (BRICS) ஒழுங்கமைப்பினது ஆறாவது உச்சி மகாநாடு தொடர்பான **தவறான** கூற்று இவற்றுள் எது?
(1) கடந்த யூலை மாதம் பிரேசிலில் நடைபெற்றது.
(2) புதிய அபிவிருத்தி வங்கி ஒன்று அமைக்கப்படுவதற்கு மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.
(3) மேல்நாட்டு நிதி ஆதிக்கத்திற்கு மாற்றாக வங்கியொன்று மாகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.
(4) மாகாநாட்டின் தலைமைத்துவம் சீனாவிற்கு உரித்தாகியது. (.........)

[பக் 3 ஐப் பார்க்க.

EXAMMOOD.LK EXAMMOOD.LK

14. ஓசோன் படைகள் அதிகளவில் பரந்து காணப்படுவது கீழேயுள்ள எந்த நாட்டிற்குரிய உயர் வானத்திலாகும்?
(1) இந்தியா
(2) சீனா
(3) ஐக்கிய இராச்சியம்
(4) அண்டாட்டிக்கா
(.........)

15. பின்வருவனவற்றுள் **பொருந்தாதது** எது?
(1) சோக்கிரட்டீஸ் - தத்துவம்
(2) பைதகரசு - விஞ்ஞானம்
(3) பிளேற்றோ - வரலாறு
(4) சொபக்லீஸ் - நாடகம்
(.........)

16. ஒவ்வொரு வருடமும் உலக மரபுரிமை தினம் (World Heritage Day) அனுட்டிக்கப்படுவது எத்தினத்தில்?
(1) ஏப்பிரல் 18
(2) ஏப்பிரல் 20
(3) ஏப்பிரல் 25
(4) ஏப்பிரல் 30
(.........)

17. "நான், நீர் கூறுவதை ஏற்றுக் கொள்ளமாட்டேன். ஆனால் அதைக் கூறுவதற்கு இருக்கும் உங்கள் உரிமையைப் பாதுகாக்க உயிரையும் தருவேன் " (I disapprove of what you say, but I will defend to the death your right to say it)" என்ற பிரபல்யமான கூற்றைக் கூறியவர் யார்?
(1) வோல்டெயார்
(2) மகாத்மாகாந்தி
(3) லியோ டோல்ஸ்டோய்
(4) தோமஸ் ஜெபர்சன்
(.........)

18. உலகின் முன்னேற்றத்திற்குக் காரணமான வரலாற்று ரீதியான **ஆறு** சம்பவங்கள் கால ஒழுங்கு முறையிலே சரியாகக் குறிப்பிடப்படுவது கீழேயுள்ளவற்றுள் எதிலாகும்?
(1) மறுமலர்ச்சி, கைத்தொழிற் புரட்சி, பிரெஞ்சுப் புரட்சி, அமெரிக்கப் புரட்சி, ரஷ்யப் புரட்சி, சீனப்புரட்சி
(2) மறுமலர்ச்சி, கைத்தொழிற் புரட்சி, அமெரிக்கப்புரட்சி, பிரெஞ்சுப் புரட்சி, சீனப் புரட்சி, ரஷ்யப்புரட்சி
(3) மறுமலர்ச்சி, கைத்தொழிற் புரட்சி, பிரெஞ்சுப் புரட்சி, ரஷ்யப்புரட்சி, அமெரிக்கப் புரட்சி, சீனப் புரட்சி
(4) மறுமலர்ச்சி, பிரெஞ்சுப் புரட்சி, கைத்தொழிற் புரட்சி, அமெரிக்கப்புரட்சி, ரஷ்யப் புரட்சி, சீனப் புரட்சி
(.........)

19. பின்வருவனவற்றுள் "கிறபீன் (graphene)" என்தனால் அறியப்படுவது எது?
(1) மின் மற்றும் வெப்பம் கடத்தப்படும் இயக்க திரவியமாகும்.
(2) அமெரிக்க கையடக்க தொலைபேசி கம்பனி
(3) பசுபிக் சமுத்திரத்தில் வசித்துவரும் ஒக்டோபஸ் இனமாகும்.
(4) மேற்கு ஆபிரிக்காவின் கற்குகைகளில் காணக்கூடிய வரலாற்றுக்கு முற்பட்ட சுவடுகள்.
(.........)

20. 2014 ஆம் ஆண்டின் பொதுநலவாயநாடுகளின் விளையாட்டுப் போட்டிகளில் அதிகளவிலான பதக்கங்களைப் பெற்ற நாடுகளின் சரியான ஒழுங்கு முறையினைக் குறிப்பிடுவது கீழுள்ளவற்றுள் எதுவாகும்?
(1) இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, கனடா, ஸ்கொட்லாந்து, இந்தியா
(2) இங்கிலாந்து, இந்தியா, கனடா, அவுஸ்திரேலியா, ஸ்கொட்லாந்து
(3) இங்கிலாந்து, கனடா, அவுஸ்திரேலியா, ஸ்கொட்லாந்து, இந்தியா
(4) இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, இந்தியா, ஸ்கொட்லாந்து, கனடா
(.........)

(01 × 20 = 20 புள்ளிகள்)

● **21** தொடக்கம் **30** வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான **விடையைத்** தரப்பட்டுள்ள **புள்ளிக் கோட்டின் மீது** எழுதுக.

21. தற்போதைய ஐரோப்பிய ஒன்றியத்தினாலும் ஏனைய ஐக்கிய அமெரிக்க நாடுகளினாலும் ரஷ்யா மீது தடைகள் விதிக்கப்படுவதற்கான பிரதான காரணம் என்ன?

....

22. சமூக சமத்துவம் மற்றும் நியாயத்தன்மை தொடர்பாக ஐக்கிய நாடுகள் தாபனத்தின் முதல் ஆவணம் எது?

....

23. இந்தியக் குடியரசினால் பிரகடனத்தப்பட்ட புதிய பிராந்திய அரசு எது?

....

[பக் 4 ஐப் பார்க்க.

EXAMMOOD.LK
EXAMMOOD.LK

2557

24. தற்போது ஆசியாவிலே **குறைந்தளவு** மக்கட் தொகை விருத்தியைக் கொண்டுள்ள நாடு எது?

....

25. மாலைதீவினது அரசகரும மொழி யாது?

....

26. யுனெஸ்கோ (UNESCO) ஒழுங்கமைப்பினது முழுப் பெயரைத் **தமிழில்** அல்லது **ஆங்கிலத்தில்** எழுதுக.

....

27. "நீலக்கிரகம் (blue planet)" என்ற பெயரால் அறியப்படுவது எந்தக் கிரகமாகும்?

....

28. ஒரு நனோ மீற்றர் என்பது மில்லிமீற்றர் ஒன்றினது எத்தனை பங்காகும்?

....

29. மனித உடலிலே "இன்சுலினை" சுரக்கின்ற சுரப்பி யாது?

....

30. சூரியனின் மேற்பரப்பினது வெப்பநிலை கெல்லின் பாகையில் எவ்வளவு?

....

(01 × 10 = 10 புள்ளிகள்)

- **31** தொடக்கம் **35** வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்குமான சரியான **விடையைத்** தரப்பட்டுள்ள **புள்ளிக் கோட்டின் மீது சுருக்கமாக** எழுதுக.

31. தற்போதைய உலக கிராம எண்ணக்கருவிற்கேற்ப ஒவ்வொரு இலங்கையரும் இலங்கையராகச் செயற்படுவதற்கும் உலகப் பிரஜையாக சிந்திப்பதற்கும் பயிற்சி வழங்கப்பட வேண்டும்.

    (i) ஒவ்வொரு இலங்கையரும் உலகப் பிரஜை எனச் சிந்திப்பதற்குப் பயிற்சியளிக்கப்பட வேண்டியதற்கான **இரு** காரணங்களைக் குறிப்பிடுக.

    (அ) ....

    (ஆ) ....

    (ii) தற்போது எல்லைகளற்ற உலகை ஏற்படுத்துவதற்கான **இரு** காரணங்களைக் குறிப்பிடுக.

    (அ) ....

    (ஆ) ....

    (iii) உலகப் பிரஜை என்ற வகையில் ஊட்டப்பட வேண்டிய **இரு** பண்புகளைக் குறிப்பிடுக.

    (அ) ....

    (ஆ) ....

32. எந்தவொரு நாட்டில் அல்லது நிறுவனத்தில் ஏற்படும் நிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்தி மூலம்தான் அந்த நாட்டினது அல்லது நிறுவனத்தினது எதிர்காலம் தீர்மானிக்கப்படுகிறது.

    (i) நிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்தி என்ற எண்ணக்கருவை விளக்குவதற்கான பொருத்தமான **இரு** வரைவிலக்கணங்களைத் தருக.

    (அ) ....

    (ஆ) ....

    (ii) நிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்திக்காகச் செயற்படும் ஐக்கிய நாடுகள் சபையினது **இரு** நிறுவனங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

    (அ) ....

    (ஆ) ....

EXAMMOOD.LK